DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.28/2024**
Prosecution witness **PW.5 (LW.6)**

| | | | |
|---|---|---|---|
| Name | : திியாகராஜன் | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : | | |

**(Accused A1, A2 Present. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **28.10.2025**

**28.10.2025 முதல் விசாரணை** :

1. நான் கக்காச்சியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக கண்டுள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

2. 09.02.2024ம் தேதி மதியம் 03.45 மணியளவில் எங்கள் ஊரிலுள்ள மாரியம்மன் கோவில் அருகே நானும் கீழ் கக்காச்சியை சேர்ந்த எனது சித்தப்பா மகன் செந்தில்குமாரும் நின்றுகொண்டிருந்த போது கொலகொம்பை காவல் நிலையத்தை சேர்ந்த போலிசார் அங்கு வந்து எனது சித்தப்பா தனபால் வீடு எங்குள்ளது என்று கேட்டார்கள். போலிசாருக்கு எனது சித்தப்பா தனபாலின் வீட்டை நான் கூட்டிக்கொண்டு வந்து காட்டினேன்.

3. போலிசார் சித்தப்பா தனபாலின் வீட்டை பார்த்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் செந்தில்குமாரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் தான் அது, **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது )** போலிசார் சம்பவயிடத்திலிருந்து எதிரிகள் என் சித்தப்பாவை அடிக்க பயன்படுத்திய விறகு கட்டை ஒன்றை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார்கள். **(அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது )** அதிலும்

நானும் சாட்சி செந்தில்குமாரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 மரக்கட்டை தான் அது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

1. என்னுடன் சாட்சி கையொப்பம் செய்த எனது சித்தப்பா மகன் செந்தில்குமார் மீது கனம் நீதிமன்றத்திலும் கனம் உதகை நீதிமன்றங்களிலும் நிறைய குற்ற வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்தை அடையாளம் காட்டிய போது நானும் செந்தில்குமார் மற்றும் சித்தப்பா தனபால் மட்டும் தான் அங்கிருந்தோம். எனது சித்தப்பா தனபால் மற்றும் எதிரிகள் குடியிருக்கும் வீடானது லைன் வீடு என்றால் சரிதான். பக்கத்தில் குடியிருந்தவர்களை போலிசார் விசாரித்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது.

2. எனது சித்தப்பா வீட்டிற்கு முன்பாக நடைபாதை உள்ளது என்றும், அதில் எல்லோர் வீட்டின் முன்பாக விறகு கட்டைகள் அடுக்கி வைத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. எனது சித்தப்பா வீட்டின் முன்பாக மட்டும் தான் விறகு கட்டைகள் அடுக்கி வைத்திருந்தார்கள். அவ்வாறு அடுக்கி வைக்கப்பட்டிருந்த கட்டைகளில் இருந்து தான் அ.சா.பொ.1 மரக்கட்டையை போலிசார் எடுத்தார்கள். அன்றைய தினம் போலிசார் சுமார் 1 மணி நேரம் சம்பவயிடத்தில் இருந்தார்கள்.

3. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆவணங்கள் தயார் செய்யப்படவில்லை என்றும், அ.சா.பொ.1 கைப்பற்றப்படவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு அ.சா.1 எனது சித்தப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

ஒம்/– அப்துல் சலாம்
நீதித்துறை நடுவர்
குன்னூர்